[2018 ஜூலை 5

280—

பேருந்து வசதி

***4648—திரு. அ. சண்முகம்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிணத்துக்கடவு தொகுதி, உக்கடம் முதல் முத்துக்கவுண்டனூர் வரை புதிய வழித்தடத்தில் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) உக்கடம் முதல் முத்துக்கவுண்டனூர் வரை ஒரு நகரப் பேருந்து மற்றும் ஒரு புறநகரப் பேருந்து ஆகிய இரண்டு பேருந்துகள் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், கோயம்புத்தூர் கோட்டத்தின் மூலமாக இயக்கப்படுகின்றன. மேலும், இவ்வழித்தடத்தில் பகுதிவாரியாக பேருந்துகள் இயக்கப்படுகின்றன. எனவே, இப்புதிய வழித்தடத்தில், கூடுதலாக பேருந்துகள் இயக்க வேண்டிய அவசியம் எழவில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சண்முகம் அவர்கள்.*

திரு. அ. சண்முகம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாழும் காலத்திலே வரலாறு படைத்து, 8 கோடி தமிழ் மக்களின் நெஞ்சமெல்லாம் நிறைந்திருக்கும் மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அம்மாவின் நல்லாசியோடு தமிழகத்தை நல்வழியில் நடத்தும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களையும், மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன். எங்கள் மாவட்டத்தைச் சேர்ந்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் என் வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

முற்பகல் 11–25

கோவை மாவட்டம், பொள்ளாச்சியிலிருந்து கிணத்துக்கடவு, ஒத்தக்கால் மண்டபம் வழியாக வேலவந்தவளம் வரை புதிய வழித்தடத்தை உருவாக்க வேண்டுமென்று மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். அதேபோன்று, வேலவந்தவளத்திலிருந்து கோவை—புதூர்—பேரூர்—பட்டீஸ்வரம் கோயில் வழியாக மருதமலை முருகப் பெருமான் கோயிலுக்கு புதிய வழித்தடத்தை உருவாக்கினால், சஷ்டி, கிருத்திகை போன்ற விசேஷ நாட்களில் பக்தர்கள் வந்து செல்ல வசதியாக இருக்கும். தங்களுக்கும் முருகப் பெருமானின் அருள் கிடைக்கும். ஆகவே, இந்த வழித்தடங்களில் பேருந்துகளை இயக்க மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டு அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இரண்டு புதிய வழித்தடங்களைக் கேட்டிருக்கிறார். இந்தக் கோரிக்கையை ஏற்கெனவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் என்னிடத்தில் கொடுத்திருக்கிறார் என்று நினைக்கிறேன். அவர் கேட்டிருக்கிற வழித்தடங்களை ஆய்வு செய்து, தேவை இருக்குமாயின், அந்த வழித்தடங்களில் பேருந்துகளை இயக்குவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அனுமதியைப் பெற்று பரிசீலிக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சண்முகம் அவர்கள்.*

திரு. அ. சண்முகம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கேட்ட அந்த வழித்தடங்களில் பேருந்துகளை இயக்க ஆவன செய்யப்படும் என்று கூறிய மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி கூறி, அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன் அவர்கள்.*

திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய கழகத் தலைவர் முத்தமிழ் அறிஞர், தலைவர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்த காலத்தில், எங்களுடைய கழகச் செயல் தலைவர், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர், மரியாதைக்குரிய அண்ணன் தளபதியார் அவர்கள் சென்னை மேயராக இருந்த காலத்தில், குக்கிராமங்களில் இருக்கும் மக்கள் எல்லோரும் நகர்ப்புறங்களோடு தொடர்புகொள்வதற்கு, மருத்துவமனைக்கு வருவதற்கு, பள்ளிகளுக்கு வருவதற்கு, பொருட்கள் வாங்குவதற்கு, மினி பஸ் என்கிற திட்டத்தைக் கொண்டு வந்து ஒரு வரலாற்றைப் படைத்தார்கள். அந்தவகையில் என்னுடைய திருச்செந்தூர் சட்டமன்றத் தொகுதியில் உடன்குடி ஒன்றியத்தில் எட்டு மினி பஸ்* routes *இருந்தன. அந்த 8 மினி பஸ்* routes-*ம் இன்றைக்கு ஒட்டுமொத்தமாக நிறுத்தப்பட்டு ஒரு வருட காலமாகின்றது. அந்த 8 மினி பஸ்* routes-*ம் நிறுத்தப்பட்டுள்ளன என்று அதிகாரிகளிடம் சொன்னால், அது உங்கள் ஆட்சிக்காலத்தில் வந்தது, அதை நிறுத்திவிட்டார்கள், அதற்கு நாங்கள் என்ன செய்வது என்ற கருத்தைச் சொல்கிறார்கள். ஆகவே, அந்தக் குக்கிராமங்களில் இருக்கின்ற மக்களுக்குப் பயன்படுகின்ற வகையில், அந்தப் பேருந்துகளை இயக்குவதற்காக. . . (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அமைதியாக இருங்கள். மாண்புமிகு உறுப்பினர், நீங்கள் கேள்வியைக் கேளுங்கள்.*

திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்: *அந்த மக்கள் நகரத்திற்கு வந்து செல்வதற்கும், பள்ளிகளுக்குச் செல்வதற்கும், அவர்கள் தங்களுடைய பணிகளைச் செய்வதற்கும், டவுன் பஸ்களை உடன்குடி ஒன்றியத்தில் இயக்குவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்து தருவாரா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாகக் கேட்க விரும்புகின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மினி பேருந்துகள் குறித்து ஏற்கெனவே இந்த அவையில் நான் முழுமையாக என்னுடைய பதிலைப் பதிவு செய்திருக்கிறேன். 8 பேருந்துகளை அரசு நிறுத்தியதாகச் சொல்வது தவறான கருத்து. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அமைச்சராக*

2018 ஜூலை 5]

இருந்தவர். அந்த 8 பேருந்துகளை அவரே இயக்க வேண்டுமென்று விரும்பினால், நாளைக்கே நாங்கள் அனுமதி கொடுக்கத் தயார். ஏனென்று சொன்னால், நாங்கள் எந்த மினி பஸ்களையும் நிறுத்தவில்லை. உங்கள் ஆட்சிக்காலத்தில் விடப்பட்ட பேருந்துகள் இயங்கிக் கொண்டுதான் இருக்கின்றன.

குறிப்பிட்ட வழித்தடங்களில் வருவாய் இல்லை என்ற காரணத்தினால் சில பேருந்துகளை நிறுத்தியிருக்கிறார்கள். அதுதான் உண்மை. எனவே, நீங்கள் விரும்பினால், அந்த வழித்தடங்களை நீங்களே இயக்குங்கள். சட்டத்திற்குட்பட்டு, 30 சதவிகிதம் பேருந்துகள் செல்லக் கூடிய வழித்தடங்களிலும், 70 சதவிகிதம் பேருந்து செல்லாத வழித்தடங்களிலும், கிராமப் பகுதிகளை நகரப் பகுதிகளோடு இணைக்க வேண்டும் என்கின்ற எண்ணத்தில் இயக்கப்பட்ட பேருந்துகளை, நீங்கள் வேண்டுமானால் இயக்கலாம். எனவே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை அவர் விரும்பினால் நிறைவேற்றப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எச். வசந்தகுமார் அவர்கள்.*

திரு. எச். வசந்தகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் ஏறத்தாழ 4, 5 முறைகள் நாங்குநேரி தொகுதிக்குப் பேருந்துகள் வேண்டும் என்று கேட்டிருக்கின்றேன். 41 முறை கருத்துரு கொடுத்தேன். இரண்டு பேருந்துகளைக் கொடுத்தார்கள். அதில் ஒன்று ஓடவில்லை. வள்ளியூரிலிருந்து திருச்செந்தூர் செல்வதற்கு 47A என்ற ஒரு பேருந்து இருந்தது. அதுவும் தற்போது நிறுத்தப்பட்டுள்ளது. அமைச்சர் பெருமகனார் இதனைக் கவனத்தில் கொண்டு, நாங்குநேரி சட்டமன்ற உறுப்பினர் வசந்தகுமாருக்கு கொஞ்சம் தயவு காட்டும்படி மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்மூலம் கேட்டு அமர்கின்றேன். நன்றி, வணக்கம்.*

முற்பகல் 11–30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எப்போதும் பேருந்து கேட்டுக் கொண்டேயிருப்பார். இருந்தபோதிலும் 2 பேருந்துகளில் ஒன்று ஓடவில்லை என்று சொல்லியிருக்கிறார். அதுபற்றி அதிகாரிகளிடத்தில் ஆய்வு செய்து, அதற்குண்டான நடவடிக்கை எடுக்கப்படும். அதேபோல, வள்ளியூரிலிருந்து திருச்செந்தூருக்குப் பேருந்து இயக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார். ஏற்கெனவே அந்த வழித்தடத்தில் பேருந்துகள் இயங்கிக் கொண்டிருக்கின்றன. இருந்தபோதிலும் அவருடைய கோரிக்கையைப் பரிசீலித்து, பயணிகளின் அடர்வுக்கேற்ப மாண்புமிகு அம்மாவினுடைய வழியில் நடைபெறும் அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு சென்று, பேருந்துகளை இயக்குவதற்குண்டான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்—விடைகள் நேரம் முடிவுற்றது.*

[**குறிப்பு:** *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.*]

2. விதி 110—ன்கீழ் அறிக்கைகள்

(அ) ஆதி திராவிடர் மாணவர் விடுதிகளில் அலமாரிகளுக்கு இரும்புக் கதவு மற்றும் பூட்டு சாவி வசதி செய்தல், பழங்குடி இன மக்களுக்கு விடுகள் கட்டுதல், திறனுக்கேற்ப தொழில் தொடங்க நிதியுதவி வழங்குதல் குறித்த முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவை விதி 110—ன்கீழ் அறிக்கைகள் அளிக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*